Queensland Health

# Public healthcare access

## For people seeking asylum who do not have a Medicare Card

People seeking asylum in Australia who are not eligible for a Medicare Card can access public hospitals in Queensland free of charge. Please refer to Queensland Health Fees for Health Care Services Health Directive (QH-HSD-045:2016).

**Each time you visit a hospital, please tell staff:**

- your name
- your date of birth
- your contact details
- that you are a person seeking asylum
- if you are receiving support and health services from the International Health and Medical Service (IHMS) or a Status Resolution Support Services (SRSS) provider.

You will need to provide this information **every time** you visit a Queensland hospital. Hospitals are safe spaces to provide information. Staff are not allowed to share your personal information without your consent.

**Provide photo identification if you can. Examples of photo identification include:**

- Passport/travel document
- ImmiCard/Visa Evidence Card
- Driver's licence
- Student card.

**Bring documentation that shows you are seeking asylum. This will ensure that you do not have to pay to receive services at the hospital. Bring one of the following documents:**

- Documentation from the Department of Home Affairs confirming your current visa status
- Protection visa application letter
- SRSS payment card
- Judicial review - re-application for Bridging visa E (BVE) letter
- IHMS card
- Any information that can show you are a person seeking asylum.

If you are receiving support from IHMS or an SRSS provider, the hospital might arrange for the provider to pay for your visit.

**Explain to hospital staff what is going wrong with your health:**

Explain your health concerns to staff so that they can assess how sick you are. In Emergency Departments, people who are considered the most unwell are seen by doctors first. This might mean other sick people who come in after you are seen by a doctor before you. You may also be required to wait longer if a specialist doctor is requested to get you the right health care.

*To help staff provide you with the best care, please* ***bring along any medical records you have*** *and* ***let staff know if you need a free interpreter, and what your preferred language is.***



Queensland Government

# பொதுச் சுகாதார அணுகல்

## புகலிடம் கோரும், மெடிகேர் அட்டை இல்லாதவர்களுக்கானது

மெடிகேர் அட்டைக்குத் தகுதி இல்லாத, ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருபவர்கள், குயின்ஸ்லாந்தில் உள்ள பொது மருத்துவமனைகளை இலவசமாக அணுகலாம்.

**மருத்துவமனைக்குச் செல்லும் ஒவ்வொரு முறையும், ஊழியர்களுக்குத் தயவுசெய்து சொல்லவும்**:

- உங்கள் பெயர்
- உங்கள் பிறந்த திகதி
- உங்கள் தொடர்பு விவரங்கள்
- நீங்கள் புகலிடம் கோரும் நபர் என்று
- சர்வதேச சுகாதார மற்றும் மருத்துவ சேவை (International Health and Medical Service - IHMS), அல்லது நிலை தீர்மான ஆதரவு சேவைகள் (Status Resolution Support Services - SRSS) வழங்குநரிடமிருந்து, ஆதரவு மற்றும் சுகாதார சேவைகளைப் பெறுகிறீர்கள் என்றால்.

குயின்ஸ்லாந்து மருத்துவமனை ஒன்றிற்குச் செல்லும் **ஒவ்வொரு முறையும்,** நீங்கள் இந்தத் தகவலை வழங்க வேண்டும். மருத்துவமனைகள், தகவல்களை வழங்கப் பாதுகாப்பான இடங்கள் ஆகும். உங்கள் தனிப்பட்ட தகவல்களை உங்கள் அனுமதியின்றிப் பகிர ஊழியர்களுக்கு அனுமதி இல்லை.

**உங்களால் முடிந்தால், புகைப்பட அடையாளத்தை வழங்கவும். புகைப்பட அடையாளத்திற்கான உதாரணங்கள் பின்வருமாறு:**

- கடவுச்சீட்டு/ பயண ஆவணம்
- இமிகார்டு (ImmiCard) / அயல்நாட்டு நுழைவுச் சான்று (விசா) அட்டை
- ஓட்டுனர் உரிமம்
- மாணவர் அட்டை.

**நீங்கள் புகலிடம் கோருவதைக் காட்டும் ஆவணங்களைக் கொண்டு வாருங்கள். மருத்துவமனையில் சேவைகளைப் பெறுவதற்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டியதில்லை என்பதை இவை உறுதி செய்யும். பின்வரும் ஆவணங்களில் ஒன்றைக் கொண்டு வாருங்கள்:**

- உங்கள் தற்போதைய அயல்நாட்டு நுழைவுச் சான்று (விசா) நிலையை உறுதிப்படுத்தும், உள்நாட்டு விவகாரத் துறையின் ஆவணம்
- பாதுகாப்பு அயல்நாட்டு நுழைவுச் சான்று (விசா) விண்ணப்பக் கடிதம்
- SRSS கட்டண அட்டை
- நீதித்துறை மீளாய்வு - பிரிட்ஜிங் அயல்நாட்டு நுழைவுச் சான்று (விசா) E (Bridging visa E - BVE) மீள் விண்ணப்பத்திற்கான கடிதம்
- IHMS அட்டை
- நீங்கள் புகலிடம் கோரும் நபர் என்பதைக் காட்டக்கூடிய எந்தத் தகவலும்.

நீங்கள் IHMS அல்லது SRSS வழங்குநரிடமிருந்து ஆதரவைப் பெறுகிறீர்கள் என்றால், உங்கள் வருகைக்கான பணத்தை அவ் வழங்குநரே செலுத்துவதற்கு, மருத்துவமனை ஏற்பாடு செய்யலாம்.

**உங்கள் உடல்நலத்தில் என்ன தவறு நடக்கிறது என்பதை மருத்துவமனை ஊழியர்களுக்கு விளக்கவும்:**

உங்கள் உடல்நலக் கவலைகளை ஊழியர்களுக்கு விளக்கவும், அப்போதுதான் நீங்கள் எவ்வளவு நோய்வாய்ப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அவர்களால் மதிப்பிட முடியும். அவசர சிகிச்சைப் பிரிவுகளில், மிகவும் உடல்நிலை சரியில்லாதவர்களாகக் கருதப்படும் நபர்களையே மருத்துவர்கள் முதலில் பார்க்கிறார்கள். இதன் பொருள், உங்களுக்குப் பிறகு வரும் மற்ற நோய்வாய்ப்பட்ட நபர்களை, உங்களுக்கு முன்னர் ஒரு மருத்துவர் பார்க்கக்கூடும். உங்களுக்குச் சரியான சுகாதார சேவையைப் பெற்றுத்தர ஒரு சிறப்பு மருத்துவர் கோரப்பட்டால், நீங்கள் அதிக நேரம் காத்திருக்க வேண்டிவரலாம்.

*உங்களுக்குச் சிறந்த கவனிப்பை வழங்குவதற்கு ஊழியர்களுக்கு உதவ,* ***தயவுசெய்து உங்களிடம் உள்ள ஏனைய மருத்துவப் பதிவுகளையும் கொண்டு வரவும், மற்றும் உங்களுக்கு ஒரு இலவச மொழிபெயர்ந்துரைப்பாளர் தேவைப்பட்டால், உங்கள் விருப்பத் தெரிவிற்குரிய மொழி என்ன என்பதையும் ஊழியர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்***.